## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது. மற்றும் முகாமைத்துவமானது கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கம்பனி

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரிசோதனை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கை மீது கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்பட வேண்டிடும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனி செயற்பட்டிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஜூன் மாதம் 10 திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கம்பனி, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் பண்ணையொன்றாக நடாத்திச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், | 2023 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் ஒழித்தல் அடிப்படையின் மீது தயாரிப்பதற்கும் மற்றும் இது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கும் | இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க தொடர்ந்தியங்கல் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | அதன்படி, ஒழித்தல் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த பேதிலும், இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி 25 இன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஒழித்தல் அடிப்படை (Liquidation Basis) மீது நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், தொடர்ந்தியங்கும் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுப்பேன். | வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணப்பீட்டு நியம இலக்கம் 10 இன் பந்தி 17 இன் படி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட திகதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், கம்பனியினால் நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திகதி அவ்வாறு வெளிப்படுத்தியிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டு சமர்ப்பிப்பதற்காக கம்பனி, பணிப்பாளர் சபையொன்று நியமனம் செய்திருக்காமையால் விவசாய, பண்ணை விலங்கு, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் கணக்குக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நியமதத்திற்கு இணங்க பணிப்பாளர் சபையினால் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்ட திகதி வெளிப்படுத்த வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பந்தி 51 இற்கு இணங்க நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக ஆக்கபூர்வமான ஆயுட்காலம் வருடாந்தம் முகாமைத்துவத்தினால் மீளய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்ளாமையால் ரூபா 40,241,059 தொகை கிரயத்தையுடைய முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்திருந்த போதிலும், குறிப்பிட்ட சொத்துக்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இற்கு இணங்க தேவையான சீராக்கல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | கம்பனியின் ஒழித்தல் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையால் எதிர்காலத்தில் சொத்துக்களை மீள்மதிப்பீடு மேற்கொண்டு இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இற்கு இணங்க தேவையான சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்களின் தற்போதைய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஈ) | 05 வருடங்கள் மற்றும் 10 வருடங்களை மிகைத்துள்ள பெறுவனவுகள் நிச்சயமற்ற பெற வேண்டியவற்றின் மீதிகள் முறையே ரூபா 5,274,879 தொகை மற்றும் ரூபா 1,335,456 தொகை ஆக காணப்பட்டதுடன், அதற்காக இலங்கை | ரூபா 1,335,456 இற்கான மீதிகள் லிபியன் கம்பனியின் ஐந்தொகையிலிருந்து முன்கொண்டு வந்து காணப்படுவதுடன், இது தொடர்பாக எதுவித பதிவுகளும் | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 09 இன் படி சேதப்படுத்தல் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 09 இல் 5.5.15 பந்தியின் படி சேதப்படுத்தல் சீராக்கல் மேற்கொண்டிருக்கவில்லை. | கம்பனியில் காணப்படவில்லை. ரூபா 5,274,879 இற்கான மீதியில் VAT Receivable என ரூபா 1,918,750 தொகை மற்றும் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 3,356,129 இற்கான மீதிகள் அடங்குகின்றன. இந்த மீதிகளுக்காக இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 09 இல் 5.5.15 இன் படி சேதப்படுத்தல் சீராக்கல் கம்பனியின் ஒழித்துக்கட்டுனரின் அறிவுரையின் படி எதிர் காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொழும்பு பான்ஸ் இடத்தில் அமைந்துள்ள ரூபா 22,500,000 தொகை பெறுமதியான கட்டிடத்தின் கிரயம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபா 1,125,000 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | இந்த வீடு செலிங்கோ கட்டிடத்தில் அமைந்துள்ள சிறிய வீடொன்று (Apartment) ஆக காணப்படுவதுடன் அதன் பெறுமதி 2014 ஆண்டிற்கு முன்னர் இருந்து லிபியன் கம்பனியின் ஐந்தொகையிலிருந்து முன் கொண்டுவரப்பட்டிருந்தது ஒன்றாகும். அப்போது பெறுமானத் தேய்வு அலுவல்கள் கணக்குகள் தயாரித்த கணக்காய்வு நிறுவனத்தினாலும் மேற்கொண்டிருக்காமையால், எதிர்காலத்தில் அந்த வீட்டின் பெறுமதியை இனங்காண்பதற்காக மீள்மதிப்பீடொன்று மேற்கொண்டு இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இற்கு இணங்க தேவையான சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்களுக்குரிய பெறுமானத் தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | விடயம் | நிதிக்கூற்றுக் களின் படி பெறுமதி | நேரொத்த அறிக்கையின் படி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | தேசிய பண்ணை | 3,108,595 | 4,218,655 | 1,110,060 | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | மீதிகளை இணக்கஞ் செய்து |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | விலங்கு அபிவிருத்தி சபைக்கு செலுத்த வேண்டிய மீதிகள் | | | | வரையறுக்கப்பட்ட கோழி வளர்ப்பு அபிவிருத்தி தனியார் கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்கு ரூபா 3,108,595 இற்கான தொகையொன்று மாத்திரம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. 2022 ஆண்டு முதல் கம்பனி சபையின் பண்ணையொன்றென செயற்படுவதுடன், அதன்மூலம் ஏற்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் நடைமுறைக் கணக்கொன்றினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையிலிருந்து பெற வேண்டிய மீதிகள் | 3,356,129 | 0 | 3,356,129 | இந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக கம்பனியில் ஆவணங்கள் காணப்படுவதுடன், ஆவணங்களின் பிரதிகள் தலைமை அலுவலகத்திற்கு 2018, 2019 ஆண்டுகளின் போது வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பணம் இதுவரை கிடைத்திருக்காததுடன், கம்பனியின் ஒழித்தல் செய்முறையின் மூலம் தீர்த்துக்கொள்வதற்கு முடியுமாகும். | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் மற்றும் கோப்புக்களை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய பண்ணை விலங்குகள் அபிவிருத்தி சபையினால் 2014 ஆண்டு கம்பனியை தனதாக்கியிருந்ததுடன், 2014 ஜூலை 08 திகதி சபையினால் கோறிக்கையொன்றின் படி கம்பனியினால் சபையிற்கு வழங்கியிருந்த ரூபா 140,000,000 | லிபியன் கம்பனியின் பங்குகளை கொள்வனவு செய்வதற்காக தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு வழங்கியிருந்த ரூபா 140,000,000 இற்கான முற்பணம் இதுவரை கம்பனிக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை | மீதிகளை தீர்த்து ஒழித்தல் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| இற்கான முற்பணத் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எடுத்திருக்கவில்லை. எனினும், கம்பனியின் ஒழித்தல் செய்முறையுடன் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் பண்ணையொன்றாக காணப்படுவதனால் இந்த செய்முறையுடன் இது தொடர்பான பொருத்தமான நடவடிக்கையொன்று எடுக்கப்படும். | |

**1.6.2 செலுத்த வேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடன் கொடுத்தோர் காலப் பகுப்பாய்வின் படி 10 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 205,198 தொகையும், 05 – 10 வருடங்களுக்கு இடைப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 15,839,752 தொகையும், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 1,336,617 தொகையும் செலுத்த வேண்டிய பெறுமதிகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் தீர்த்திருக்கவில்லை. | கம்பனியின் நிதி நிலைமை சீரற்ற நிலையில் காணப்பட்டமையால் கடன் கொடுத்தோருக்கு உரிய நேரத்தில் கொடுப்பனவு முடியவில்லை. | கடன் கொடுத்தோருக்குரிய கொடுப்பனவுகளை உரிய முறையில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,041,686 இற்கான நட்டமொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 9,368,513 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 11,410,199 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. கம்பனியின் ஒழித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் அதன் செயற்பாட்டு அலுவல்கள் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சாட்டப்பட்டிருந்த காரணத்தினால் கம்பனியின் வருமானங்கள் மற்றும் செலவுகள் அந்த சபையின் கணக்குகளுடன் காட்டப்படுவதுடன், கம்பனியினால் மீளாய்வாண்டிற்கான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு மாத்திரம் கணக்கீடு செய்திருத்தல் இந்த பின்னடைவிற்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஜூன் மாதம் 18 திகதிய அமப/20/0890/217/052 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) கம்பனி, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சொந்தமான பண்ணையொன்றாக நடாத்திச் செல்வது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி கம்பனியினை கலைத்தல், அந்தக் கம்பனிக்கு சொந்தமான அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் மாவத்த பண்ணையின் பதவியணியினர் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கக்கூடிய தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு உரித்தாக்கல், அந்தக் கம்பனிக்கு சொந்தமான ஒரேயோரு பண்ணையான மாவத்த பண்ணை தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு உள்வாங்கல் ஆகிய கருமங்களுக்குகாக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, அந்தக் கருமங்கள் உட்பட இந்த ஒழித்தல் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்திற்கு இணங்க கடன் கொடுத்தோரின் தன்னிச்சையாக கணக்குகளை தீர்த்து முடிவுறுத்தல் என கணித்து கம்பனிச் சட்டத்தில் 335 ஆவது பிரிவிற்கு இணங்க கம்பனியின் பிரதான கடன் கொடுத்தோர் என காணப்படும் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையினால் கூறுவிலைகள் அழைக்கப்பட்ட பின்னர் எழுத்துக்கட்டுனர் என ரூபா 234,800 இற்கான விலைகூறல் ஒன்று | இந்த கம்பனியின் பணிப்பாளர் சபையின் விருப்பத்துடன் கலைப்பதற்கு உரிய ஆவணங்கள் கம்பனிப் பதிவாளர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போது அந்தக் கம்பனிச் செயலாளர்களினால் ஏற்பட்டிருந்த தொழில்நுட்ப வழுவொன்றின் காரணமாக மீண்டும் கடன் கொடுத்தோரிடம் கலைப்பதற்காக மாற்றப்பட்டிருந்தது. அதன்படி, பிரதான கடன்காரர் ஒன்றான Gold Coin (Pvt) Ltd நிறுவனம், கலைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தமையால், அந்த நிறுவனத்தின் கடன் தொகையாகிய ரூபா 13,569,510.61 தொகையினை பகுதிகளாக செலுத்திய பின்னர் ஒழித்தல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்வதற்கு முடியும். | அமைச்சரவை தீர்மானித்தின் படி ஒழித்தல் அலுவல்கள் விரைவாக மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பித்திருந்த தனியார் கம்பனியொன்று 2021 ஜூலை 16 திகதி நியமனம் செய்யப்பட்டிருந்தது. அந்த நியமனம் தொடர்பாக 2023 செப்தம்பர் 15 திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அத்துடன், 2023 ஏப்ரல் 26 திகதி ரூபா 117,400 இற்கான முற்பணம் ஒன்று ஒழித்துக்கட்டுனருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், இந்த செய்முறை ஆரம்பிக்கப்பட்டு 02 வருடங்கள் கடந்திருந்த போதிலும், 2025 மே 25 திகதி அளவிலும், அந்த அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கம்பனியின் மாவத்த பண்ணையினால் பயன்படுத்தப்பட்டு வந்த 37 – 6816 மற்றும் 49 – 4303 இலக்கங்களை கொண்ட 02 டிரக்டர் வண்டிகள் கம்பனி நிறுவுவதற்கு முன்னர் காணப்பட்ட லங்லிப் கம்பனிக்கு சொந்தமாக காணப்பட்ட போதிலும் 2024 திசெம்பர் 02 திகதி வரை அந்த வாகனங்களை கம்பனிக்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | 37 – 6816 மற்றும் 49 – 4303 இலக்கம் கொண்ட 02 டிரக்டர் வண்டிகள் கம்பனி நிறுவுவதற்கு முன்னர் காணப்பட்ட லன்லிப் கம்பனிக்கு உரித்தாக இருந்த போதிலும் கம்பனியை கலைத்தல் செய்முறையுடன் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு உரித்தாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | இந்த டிரக்டர் வண்டிகளை உரித்தாக்குவதற்குரிய அலுவல்கள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |